2005 ஏப்ரல் 13]

எந்தவிதத்திலும் இடையூறு இல்லாத இடம் என்கின்ற காரணத்தினால், அவர்களுக்கே பட்டா தருவதற்கும் அரசு முன்வருமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தமாதிரி ஆக்கிரமிப்பில் இருப்பவர்களுக்கு, முறைப்படியான அறிவிப்பை, அவர்களுக்கு 15 தினங்களுக்கு முன்பாகவே கொடுத்து, அதற்குப் பின்னர்தான் அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி இந்தமாதிரிப் பாதித்த பகுதிகளில், சில பகுதிகள் கடந்த சில தினங்களாக, மதுரை கிளையினுடைய உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி, ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதிகளில் அகற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக உரிய இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 349, திரு. என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

349—

கால்வாயைத் தூர் வாருதல்

***42178—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதி, சொட்டதட்டிக் கால்வாயைத் தூர்வாரி சுத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சொட்டதட்டிக் கால்வாயில் தூர்வாரும் பணிகள் தற்சமயம் மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 ஏப்ரல் 13

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதியில் இருக்கக்கூடிய அந்தக் கால்வாய், அதுபோன்ற மற்றக் கால்வாய்களெல்லாம், கால்வாயாகவும் இல்லாமல், சாலையாகவும் இல்லாமல் இருக்கிற காரணத்தினால், அடிக்கடி கழிவுநீர் தேங்கி, அந்த வட்டார மக்களுக்குப் பெரிய துன்பம் விளைவிப்பதாக அமைந்திருக்கிறது. தற்போது வாய்ப்பில்லை என்றாலும், எதிர்வரும் காலத்தில் பரிசீலிக்கப்படும் என்கிற உறுதியினையாவது அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய சொட்டதட்டிக் கால்வாய், வைகை ஆற்றின் வலது கரையில், குருவிக்காரன் கால்வாய் ஓடுபாலத்தின் மேற்புறத்திலிருந்து பிரிகிறது. இதன்மூலம், ஐராவதநல்லூர், சொட்டதட்டிக் கண்மாய்கள் நீரைப் பெறுகின்றன. இதன் நீளம் 3,900 மீட்டர். இதன் நேரடிப் பாசனப் பரப்பு 38.81 ஏக்கர். கண்மாய்களின் பாசனப் பரப்பு 620.82 ஏக்கர். சொட்டதட்டிக் கால்வாய் பிரியும் இடத்தில் ஆற்றின் தரைமட்டம் மிகவும் பள்ளமாக இருக்கின்றது. இதன் கண்மாய்களில் ஒன்றான ஐராவதநல்லூர் கண்மாயின் நீர்ப்பிடிப்பு, பட்டா நிலங்களாக மாற்றப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சொட்டதட்டிக் கால்வாயில் 2001–2002 ஆம் ஆண்டில் 3.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு 9.80 இலட்சம் ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகள் நடைபெற்றுள்ளன. கால்வாய்கள் அல்லது கண்மாய்கள் தூர்வாரும் பணிகள் ஏற்கெனவே நடைபெற்றிருந்தால், அதிலிருந்து 5 வருடம் பூர்த்தியான பின்னர்தான் மீண்டும் அவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. இருப்பினும், இக்கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் தற்சமயம் மேற்கொள்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவசியம் இருப்பின் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.என். சேகரன்.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற பிரதான பாசன வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு இடையூறாக இருக்கின்ற

2005 ஏப்ரல் 13]

ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றி, தூர் வாருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு; சென்னை மாநகரத்திலே இருப்பது போன்று இந்த ஆற்றோரங்களிலே தூர்வாருவதற்கு இடையூறாக இருக்கின்ற குடியிருப்புப் பகுதிகளை எல்லாம் அகற்றி அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகளையெல்லாம் கட்டிக்கொடுக்கும் அந்தத் திட்டம் போல் அனைத்துப் பகுதிகளிலும் அந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரத்து வாய்க்கால்களில் தூர்வாரும்போது இடையில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றியபின்புதான் அங்கே தூர் வாருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் நீண்ட நெடிய காலங்களாக, வீடுகளை அமைத்து குடியிருப்போருக்கு மாற்று இடமாக வீட்டுமனைப் பட்டா வழங்க, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் பாதிப்பு என்று கூறுவார்களேயானால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாளையங்கோட்டை தொகுதியிலே பாபநாசம் அணையிலிருந்து, பாளையங்காலுக்கு விவசாயத்திற்கு நீர் வருகின்ற நேரத்தில், அங்கு அந்தக் கால்வாய் தூர் வாரப்பட்டாலும்கூட, அந்தக் கால்வாயின் இருபுறங்களிலும் பெரும்பான்மையான இடங்களில் குடியிருப்புகள் இருக்கின்ற காரணத்தினால், அங்கிருந்து கழிவுகள் வருகின்ற காரணத்தால், செடி–கொடிகள் எல்லாம் பாசிப்பிடித்து படர்ந்து விடுகிறது. ஆகவே, கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடைவதற்கு அடிக்கடி பிரச்சினை வருகின்ற காரணத்தினால், அதைக் கான்கிரீட் கால்வாயாக மாற்றிக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அங்குள்ள உள்ளாட்சி அமைப்புகளிடம் கழிவுநீர்க் கால்வாய் தனியாக அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் கான்கிரீட் தளம் அமைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கின்றார்கள். அவர்கள் அதனை எழுத்துப்பூர்வமாகக் கொடுப்பார்களேயானால், அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ.கு.சீ. அன்பழகன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழனுடைய பொற்கால ஆட்சிக்கு இணையாக, ஏரிக் குளங்கள், கால்வாய்கள், தூர்எடுத்தும், கரைகளைப் பலப்படுத்தியும், மழைநீர் சேகரிப்புத் திட்டங்களைப் போல பல நடவடிக்கைகளை எடுத்து தமிழகத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாத்து வரும், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, அதுபோல புதியதாக ஏரிக் கால்வாய்கள், ஏரி, குளம், குட்டைகள் அமைக்க ஏதேனும் திட்டம் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *351*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

351—

நியாய விலைக் கடை கட்டடம்

***3059—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவகுடி ஊராட்சி, வின்னக்குடி பகுதிக்கு நிரந்தர நியாய விலைக் கடை கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவகுடி பஞ்சாயத்து, வின்னக்குடி பகுதியிலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் தற்சமயம் வழிவகை செய்யப்படவில்லை என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.